# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 112 | திங்கள் Monday | 20.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தேசிய விருதுகளை வென்றுள்ள தமிழ் திரையுலக கலைஞர்களுக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து



சென்னை: தேசிய திரைப்பட விருதுகளை வென்றுள்ள தமிழ் திரையுலக கலைஞர்களுக்குதமிழ்நாடு முதலமைச்சர் விஜய் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

72-வது தேசியதிரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, அமரன் படத்திற்கு மூன்று விருதுகளும், மகாராஜா படத்திற்குஇரண்டுவிருதுகளும், கேப்டன் மில்லர் படத்திற்கு இரண்டு விருதுகளும், ராயன் படத்திற்கு ஒரு விருதும், 'ப்ளூ' குறும்படத்திற்கு ஒரு விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 10 தேசிய விருதுகளை வென்று தமிழ்த் திரையுலக கலைஞர்கள் சாதனைப் படைத்துள்ளனர்.

தேசிய விருதுகளை வென்ற தமிழ் திரையுலகக் கலைஞர்களுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், திரையுலகினர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், தேசிய விருது பெற்ற கலைஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், " தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், பல்வேறு பிரிவுகளில் 10 தேசியதிரைப்பட விருதுகளை வென்று சாதனை படைத்துள்ள தமிழ்த் திரையுலக கலைஞர்களுக்குதனது பாராட்டுகளையும்,வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

2024-ஆம் ஆண்டில் வெளிவந்த திரைப்படங்களுக்கான 72-வது தேசியதிரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. அதில், நடிகர் தனுஷ் இயக்கி நடித்துள்ள "ராயன்" திரைப்படத்திற்குச் சிறந்த தமிழ் திரைப்படத்திற்கான விருதும், "கேப்டன் மில்லர்" திரைப்படத்திற்குத் தேசிய, சமூக மற்றும் சுற்றுச் சூழல் விழுமியங்களை ஊக்குவிக்கும் சிறந்த திரைப்படத்திற்கான விருது மற்றும் அப்படத்தில் நடித்த தனுஷுக்கு சிறப்புப் பிரிவில் சிறந்த நடிகருக்கான விருதும், "அமரன்" திரைப்படத்திற்காக ராஜ்குமார் பெரியசாமிக்கு சிறந்த இயக்குநருக்கான விருதும்,கலைவாணனுக்குச் சிறந்த படத்தொகுப்புக்கான விருது மற்றும் ஜி.வி.பிரகாஷ் குமாருக்குச் சிறந்த பின்னணி இசைக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "மகாராஜா" திரைப்படத்திற்காக அனல் அரசுக்கு சிறந்த சண்டை பயிற்சிக்கான விருது மற்றும் அப்படத்தில் நடித்த செல்வி சாச்சனா நமிதாஸுக்கு சிறந்த துணை நடிகை விருதும், "மெய்யழகன்" திரைப்படத்திற்காக சுரேன் ஜிக்குச் சிறப்புப் பிரிவில் சிறந்த ஒலிக்கலவைக்கான விருதும், "ப்ளூ" குறும்படத்திற்காக டி.எஸ்.ஹரிஹரசுதனுக்கு சிறந்த ஒலி வடிவமைப்புக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

10 தேசிய திரைப்பட விருதுகளை தமிழ் திரையுலகம் வென்றுள்ளதை பெருமைக்குரியதாக குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், வருங்காலங்களில் தமிழ் திரையுலகம் மேலும் பல விருதுகளை பெற்றிடவும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்" இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவசேனா எம்.பி.க்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதைக் கண்டித்து

# மத்திய அரசின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு



புதுடெல்லி: திரிணாமூல் காங்கிரசின் அதிருப்தி எம்.பி.க்கள் மற்றும் அதிருப்தி உத்தவ் சிவசேனா எம்.பி.க்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதைக் கண்டித்து மத்திய அரசின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் (ஜூலை 20) தொடங்கி வரும் ஆகஸ்ட் 13- ஆம் தேதி வரை 19 நாட்கள் நடைபெறவுள்ளன. இந்த கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை மசோதா, பெண்களுக்கான இட ஒதுக்கீடுமசோதாபோன்ற முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு முனைப்புக்காட்டி வருகிறது.

கூட்டத்தொடர் அமர்வுகள் எவ்வித அமளியும் இன்றி ஆக்கப்பூர்வமாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்திற்குமத்திய அரசு அழைப்பு விடுத்திருந்தது. இதையடுத்து, இன்று (ஜூலை 19) காலை 11.00 மணிக்கு டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்திருந்த அதிருப்தி திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. ககோலி கோஸ் தஸ்திதாரை மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை மற்றும் தகவல், ஒளிபரப்புத்துறை இணையமைச்சர் எல்.முருகன் ஆகியோர் வரவேற்றனர்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா ஆகியோர் தலைமையில் நடந்தகூட்டத்தில் திமுக, அதிமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, சமாஜ்வாதி, உத்தவ் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு அதிருப்தி திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்களுக்கு அழைப்பு விடுக்கப்ப ட்டதைக் கண்டித்தும், அதிருப்தி உத்தவ் சிவசேனா எம்.பி.க்களை மகாராஷ்டிரா மாநில துணை முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனாவுடன் இணைத்த தைக் கண்டித்தும், அதிருப்தி எம்.பி.க்கள் விவகாரத்தில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா எடுத்த முடிவைக் கண்டித்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். எனினும், சிறிது நேரத்திற்கு பிறகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீண்டும் கூட்டத்தில் பங்கேற்றனர். நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மாநிலங்களவையின் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவருமான பிரமோத் திவாரி, "திரிணாமூல் காங்கிரஸ் மற்றும் உத்தவ் சிவசேனா ஆகியகட்சிகளைச்சேர்ந்த அதிருப்தி எம்.பி.க்கள் விவகாரத்தில் மக்களவை சபாநாயகர் எடுத்த முடிவைக் கண்டித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தோம்" என்று தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய திரிணாமூல் காங்கிரஸ்கட்சிஎம்.பி.மஹுவா மொய்த்ரா, "அங்கீகரிக்கப்படாத கட்சியான தேசியவாத குடிமக்கள் கட்சிக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்ததைக் கண்டித்து சமாஜ்வாதி கட்சி, திமுக, ஆம் ஆத்மி கட்சி, காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் அனைத்துக் கட்சியின் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தோம். தேசியவாத குடிமக்கள் கட்சியில் இணைந்துள்ள அதிருப்தி திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் 20 எம்.பி.க்கள் மீதான தகுதி நீக்கம் தொடர்பான மனுக்கள் இன்னும் நிலுவையில் உள்ளன.

91- வது சட்டத்திருத்தத்திற்கு பிறகு தனி அணியாகச் செயல்பட இடமில்லை. அப்படியிருக்கையில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் எந்த அடிப்படையில் அழைப்பு விடுத்தார்? நாங்கள் கடும் எதிர்ப்பைப் பதிவுச்செய்ததோடு அதை வெளிப்படுத்தும் விதமாகக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தோம். இதற்காக அனைத்து எதிர்க்கட்சிக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

திரிபுராவில் அதிகம் அறியப்படாத கட்சியாக தேசியவாத குடிமக்கள் கட்சி உள்ளது. தற்போது திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த 20அதிருப்தி எம்.பி.க்கள், இக்கட்சியில் இணைந்துள்ளனர். குறிப்பாக, கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கத்தைத் தவிர்ப்பதற்காக இணைந்துள்ளனர். திரிணாமூல் காங்கிரஸ் கட்சியில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள், தேசியவாத குடிமக்கள் கட்சியில் இணைந்துள்ள நிலையில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அவர்கள் ஆதரவு அளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஜூலை 23 வரை வெப்பநிலை உயரும்



சென்னை: தமிழகத்தில் உள் மாவட்டங்களில் நாளை முதல் 23-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வட தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஜூலை 20) முதல் 23-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

24-ம் தேதி மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள், வட கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 23-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியும், உள் தமிழகம் மற்றும் இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில், வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரையும் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் தேவாலா, சிவகங்கை, நடுவட்டம், பந்தலூர், பார்வூட், வூட் பிரையர் எஸ்டேட், கோவை மாவட்டம் சின்னக்கல்லார், ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு, விழுப்புரம் மாவட்டம்வளத்தி ஆகிய இடங்களில தலா 1 செமீ மழை பதிவாகியு

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு ள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM


வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்


Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



நெல்லை மாவட்டம் ஸ்ரீ ரெகுநாதபுரம், நதிப்பாறை, ரோஸ்மியாபுரம் ஊர் பொதுமக்கள் சார்பில் முன்னாள் முதல்வர் கல்வி கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் 124வது பிறந்த நாளையொட்டி இளவட்டக்கல் தூக்கும் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது இவ்விழாவில் சிறந்த சமூக சேவைக்கான கல்வித் தந்தை காமராஜர் விருதினை பணகுடி சமூக ஆர்வலர் எம்.ஐ.எம். ஐயப்பனுக்கு விழா கமிட்டினர் சார்பில் வழங்கிய விருதினை ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். கே கிறிஸ்டோபர் வழங்கி பாராட்டினார்.

# எட்கிருஷ்ணாபுரம் ஸ்ரீ முனீஸ்வரன் கோவிலில் ஆடி திருவிழா; ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்





வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுக்கா, எ ட் கி ரு ஷ் ண ா பு ர ம் ஏரிக்கோடியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரன் கோவிலில் ஆடி மாத முதலாம் வெள்ளியை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை ஆடி திருவிழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

விழாவையொட்டி அதிகாலை சுவாமிக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து மேளதாளம் முழங்க பொங்கல் வைத்து சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டது.

பக்தர்கள் முனீஸ்வரன் சன்னதி முன்பு பொங்கல் வைத்து வழிபாடு செய்தனர். பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் குடும்பத்து டன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து அருள் பெற்றனர்.

பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டதுடன், விழா அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

## காமராஜர் பிறந்தநாள் விழா

# வள்ளியூரில் காங்கிரஸ் கட்சி சார்பில் 124 நபர்களுக்கு நலத்திட்டம் வழங்கும் விழா



நெல்லை மாவட்டம் வள்ளியூரில் பெருந் தலைவர் கல்வித் தந்தை காமராஜர் 124-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வள்ளியூரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அதனைத் தொடர்ந்து

காங்கிரஸ் கட்சி சார்பில் நலத்திட்ட உதவிகளை 124-நபர்களுக்கு வழங்கி சிறப்புரை யாற்றினார் இதில் தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் அல்போன்ஸ் ராஜா நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் வரவேற்றார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ராஜேஷ், முன்னாள் மாவட்ட தலைவர்கள் தமிழ்செல்வன், மோகன்குமாரராஜா, மனித உரிமை மாநில துணைத் தலைவர் விவேக் முருகன். மாவட்ட துணை தலைவர் குமாரசாமி, நகர காங்கிரஸ் பொதுச்செயலாளர் சிவனைந்தபெருமாள், வள்ளியூர், பேரூராட்சி மன்ற கவுன்சிலர் சசி, தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் துணைத் தலைவர் ஜவகர் பெர்னாண்டோ, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



★தென்காசி நகராட்சி, ஆசாத் நகரில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 20252026 இன் கீழ் ரூ.6945.00 இலட்சத்தில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளுக்காக 12.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டியில் மேல்கூரை அமைப்பதற்கான கம்பி கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை இயக்குநர், நகராட்சி நிர்வாகம் திரு.பி.மதுசூதன் ரெட்டி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், உடன் உள்ளார்.★

# இஸ்ரோவில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புபில் முன்னுரிமை வழங்க வேண்டும்

## நெல்லை எம்.பி.ராபாட் புரூஸ் வலியுறுத்தல்



நெல்லை. நெல்லை மாவட்டம் காவல்கிணறு உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க கோரி மத்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ அதிகாரியிடம் நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் கோரிக்கை மனு அளித்தார்

காவல்கிணறு இஸ்ரோ மைய அதிகாரியை நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் சந்தித்து உள்ளூர் மற்றும் அடிப்படை வசதிகளை வலியுறுத்தி மனு அளித்தார் பின்னர் இஸ்ரோ மைய வளாகம் செய்தியாளர்களுக்கு அளித்தபேட்டியில் கூறியதாவது காவல்கிணறு உள்ள மத்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவில் உள்ளூர் இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிறகு உத்தரவாதம் அளிக்கவும் இஸ்ரோ மையத்தின் தலைமை அலுவலகத்தை காவல் கிணறு பகுதியில் அமைக்கவும்

இஸ்ரோ மையத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் ஏனைய பிரிவில் தொழில் நுட்ப வல்லுனர்கள் என சுமார் 729 பேர் பணிபுரிந்து வருகின்றனர் இதனை ஆயிரமாக உயர்த்தி உள்ளூர் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் கோரிக்கை கோரிக்கை விடுத்துள்ளேன் மேலும் பணகுடியில் வாலிபால் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என்ற எனது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதாக உயர் அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்

இந்நிகழ்வில் வட்டார காங்கிரஸ் தலைவர் அருள்தாஸ், நகர தலைவர் எட்வின், மாவட்ட செயலாளர் ராஜேஷ்,

தனக்கர்குளம் ஊராட்சி தலைவர் சுயம்பு லிங்கதுரை,

இஸ்ரோ தொழிற்சங்க அலுவலக தலைவர் ராஜசேகர், செயலாளர் புருஷோத்தமன், ராஜேந்திரன், மணிகண்டன், மாரியப்பன், விக்னேஷ்வரன், அனீஸ்,

, கேது, சிவகண்டன், கருப்பசாமி, உட்பட பலர் கலந்து கொண்டனர் முன்னதாக தொழிற் சங்க கொடியை எம்.பி ராபர்ட் புரூஸ் வளாகத்தின் ஏற்றி வைத்தார்.

## உலக கோப்பை கால்பந்து இறுதி போட்டி

# தமிழ்நாட்டிலும் பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கவேண்டும்

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக கோப்பை கால்பந்து போட்டி நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், உலகில் உள்ள சுமார் 150-க்கும் மேற்பட்ட நாடுகள் உலக கால்பந்து தகுதிச் சுற்றுகளில் விளையாடி, இறுதியாக 48 நாடுகள் உலக கோப்பை போட்டியில் விளையாடதகுதிபெறும். அதன்படி, இந்த ஆண்டு மெக்சிகோ மற்றும் அமெரிக்காவில் ஜூன் மாதம் 11-ஆம் தேதி தொடங்கி, நாளை (20.07.2026) அதிகாலை 12.30 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெற உள்ளது. வதும் 150 நாடுகளுக்கும் மேலாகத் தகுதிச் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடியதில், அர்ஜென்டினா, பிரேசில், போர்ச்சுகல், ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, மெக்சிகோ உள்ளிட்ட 48 அணிகள் உலக கோப்பை போட்டியில் விளையாடின. இதில், அரையிறுதிப் போட்டிகளில் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் அணிகள் விளையாடியதில் ஸ்பெயின் அணியும், மற்றொரு அரையிறுதிப் போட்டியில் அர்ஜென்டினா மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடியதில் அர்ஜென்டினா அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று நாளை விளையாட உள்ளன.

இந்த இறுதிப் போட்டியைக்காண உலகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இந்திய நேரப்படி நாளை அதிகாலை 12.30 மணிக்குத் தொடங்கி, போட்டி முடிய காலை 4.00 மணிக்கும் மேல் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலான பள்ளி, கல்லூரி மாணவர்கள் இந்தப் போட்டியைக்காண ஆவலுடன் உள்ளதால், காலை நேரங்களில் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வது பெரும் சிரமமாக இருக்கும். இதைக் கருத்தில்கொண்டு, கேரள மாநில அரசு கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளித்துள்ளது.

அதேபோல, தமிழ்நாட்டிலும் மாணவர்கள் ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டுமென முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் அவர்களையும், விளையாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆதவ் அர்ஜூனா அவர்களையும், உயர்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு விஸ்வநாதன் அவர்களையும் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சா.அருணன் நிறுவனத் தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் -ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு.

## இளைஞர்களுக்கும் இடமில்லை, திமுகவில் எளியவர்களுக்கும் இடமில்லை

# திமுகவுடன் இனி பயணிக்க முடியாது என்று அக்கட்சியில் இருந்து வெளியேறுவதாக திமுக கவுன்சிலர் கோவை பாபு பரபரப்பு பேட்டி



தனது குடும்பம் என்கிற வட்டத்திற்கு அப்பாற்பட்டு இந்த சமூகத்திற்கு நம்மால் இயன்ற பணிகளை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு கடந்த 2020 ஆம் ஆண்டில், திராவிடன் எனும் அறக்கட்டளையை தொடங்கி கல்வி, சமூகம் சார்ந்த அறப்பணிகளை செய்து வந்தவர் கோவை பாபு. தனது பொது பணிகளை இன்னும், விரிவாக செய்யலாம் என்கின்ற எண்ணத்தோடும், ஆசையோடும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, பணியாற்ற விரும்பி கட்சியில் இணைந்துள்ளார். இவருக்கு திமுக அயலக அணி, கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் என்ற பொறுப்பை திமுக அரசு வழங்கியதுடன், நடைபெற்று நிறைவு பெற்ற கவுன்சிலர் தேர்தலில், வார்டு எண் 22ல், வெற்றி பெற்று தற்போது வரை திமுக கவுன்சிலராக இருந்து வருகிறார். இவர் இன்று கோவை சரவணம்பட்டி பகுதியில் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. கொள்கை உறுதியும், ஏழை எளிய, குடும்ப பின்னணியும், கொண்ட சாமானிய இளைஞர்களால், மக்களுக்காக தொடங்கப்பட்ட இயக்கம் திமுக, ஆனால் இன்றைய திமுகவில் அந்த நிலை இல்லை, இப்பொழுது இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், சாமானியர்களின் கட்சியாக இல்லை எனவும், அது ஒரு கார்ப்பரேட் கம்பெனியாக மாறியிருக்கிறது எனவும், இங்கே சாமானியன் ஒருவன் வெறும் வாக்காளனாகவோ, அல்லது கட்சியின் அடிப்படை தொண்டனாகவோ இருக்கலாமே தவிர, எந்த ஒரு காலத்திலும் உண்மையான மக்கள் தொண்டாற்றவோ, பொறுப்புகளுக்கோ, உயர் பதவிகளுக்கோ வர முடியாது என்கின்ற நிலையை கட்சி மேலிடம் நிர்பந்து வருகின்றது என தெரிவித்தார். மேலும் தான் ஒரு வார்டு கவுன்சிலர், மாவட்ட அளவில் கட்சியின் அயலக அணி செயலாளர் ஆனால், எனக்காக தேர்தல் பணியாற்றியவர்களுக்கு, என்னை நம்பி திமுகவில் சேர்ந்து, கட்சி பணி செய்கிறவர்களுக்கு கூட, இந்த கவுன்சிலர் பதவியும் கட்சிப் பதவியும் வைத்து, ஒருவீட்டு வரி ரசீதை கூட கட்சிநிதி இல்லாமல் செய்ய முடியவில்லை என்று வேதனை தெரிவித்தார். இதற்கு மேலும் இந்த கட்சியில் நான் ஏன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு மேலோங்கி வருகின்றது. எனவே இக்கட்சியில் இருந்து தான் விலகுவதாக தெரிவித்தார். திமுக தலைமை, கோவை மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக செந்தில் பாலாஜியை நிர்ணயித்த பிறகு கோவை மாவட்டத்தில் திமுக கட்சி கரூர் கம்பெனியாகவே மாறிப்போனது எனவும், கட்சியின் நிர்வாகிகள், அனைவரும் செந்தில் பாலாஜி கம்பெனியின் வேலைக்காரர்களாக வேலை செய்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். எனவே விரைவில் தனது அரசியல் குறித்த அடுத்த கட்ட நகர்வு குறித்த அறிவிப்பை வெளியிட உள்ளதாகவும், தற்பொழுது வரை தான் எந்த கட்சிக்கும் ஆதரவாக இல்லை என்றும் தெரிவித்தார். மேலும் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர், துவங்கப்பட்டு தற்போது, ஆட்சி அமைத்துள்ள தவெக அரசு, அனைத்து ஊழல்களையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து வருகின்றது, இது தனக்கு மகிழ்ச்சியை அளித்து வருவதாகவும், நான் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று எண்ணினேனோ அதை, தவெக தலைமை அரசு செய்து வருகின்றதாக பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோட்டில் 2 ஆம் ஆண்டாக போதைப்பொருள் எதிரான விழிப்புணர்வு டிப்ஸ்சத்தான் 2026 மாரத்தான் போட்டி



ஈரோடு மாவட்டம் சென்னிமலை சாலை சேனாதிபதி பாளையத்தில் உள்ள இந்தியன் பப்ளிக்ஸ்கூல் சிபிஎஸ்சி பள்ளி வளாகத்தில் போதை பொருட்களுக்கு எதிரான டிப்ஸ்சத்தான்-2026 விழிப்புணர்வு மாரத்தான் போட்டி தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வானது இந்தியன் பப்ளிக்ஸ்கூல் சிபிஎஸ்சி பள்ளி வளாகத்தில் இருந்து தொடங்கி ஈரோடு ஆர்ட்ஸ் காலேஜ் ரிங் ரோடு சாலை , கருப்பட்டி காபி கடை வழியாக மீண்டும் இந்தியன் பப்ளிக் ஸ்கூல் சிபிஎஸ்சி பள்ளி வளாகத்தில் போட்டி நிறைவு பெற்றது . இப்போட்டியில் பெற்றோர்கள் சுமார் 250க்கும் மேற்பட்டோர் பங்கு பெற்று 5 கிலோமீட்டர் தூரம் ஓடினர். இப்போட்டியினை இளங்கோ கலந்து கொண்டு கொடியை அசைத்து துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் இந்தியன் பப்ளிக் ஸ்கூல் சிபிஎஸ்சி பள்ளியின் சார்பாக பள்ளியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் சிவகுமார், முதல்வர் டாக்டர் பூனம் சிங் ஆகியோர் தலைமையில் இப்போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுல் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## கோவை பீளமேடு பகுதியில் உள்ள, ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தில் பயின்ற

# மாணவர்கள் 170 பேர் நீட் யுஜி 2026 தேர்வில் சிறந்த தரவரிசை பெற்றனர்; அவர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது



நாட்டின் முன்னணி தேர்வுப் பயிற்சி நிறுவனமான ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் கோவையில் இயங்கும் மையத்தில்பயிற்சிபெற்ற மாணவர்களில், 170 பேர் தேசிய தகுதித் தேர்வு மற்றும் நுழைவுத் தேர்வான நீட் யுஜி 2026 தேர்வில் சிறந்த தரவரிசைகளைப் பெற்றுள்ளனர். இச்சாதனையானது மாணவர்களின் தொடர்ச்சியான கடின உழைப்பு, உறுதியான குறிக்கோள் மற்றும் ஒழுக்கமான பயிற்சியின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. இதற்கு ஆகாஷ் வழங்கிய கல்வி வழிகாட்டுதல் மற்றும் கட்டமைக்கப்பட்ட கற்றல் சூழலும் முக்கிய காரணிகளாக இருந்துள்ளது.

அந்த வகையில், நிதின் தினகர்பாபு அகில இந்திய அளவில் 522-வது இடத்தைப் பெற்றுள்ளார். முத்துராகவ் 3347, ஹர்ஷிதா வெங்கடேஷ் 14627, எம். பூமிகா 16354, பிரித்திகா வாசினி வி 17594,என பல மாணவர்கள் சிறப்பான அகில இந்திய தரவரிசைகளைப் பெற்று கோவை மையத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

நீட் யுஜி 2026 தேர்வில் சிறப்பான முடிவுகளைப் பதிவு செய்ததன் மூலம், மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியில் இந்தியாவின் மிகவும் நம்பகமான கல்வி நிறுவனமாக ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் மீண்டும் தனது முன்னணி இடத்தை உறுதிப்படுத்தியுள்ளது.இந்த ஆண்டு, ஆகாஷ் மாணவர்களில் 4 பேர் அகில இந்திய தரவரிசையில் முதல் 10 இடங்களிலும், 18 பேர் முதல் 50 இடங்களிலும், 41 பேர் முதல் 100 இடங்களிலும் இடம்பெற்று தொடர்ந்து சிறப்பான சாதனையை நிகழ்த்தியுள்ளனர். வெற்றி. நிறுவனத்தின் கல்விசார் சிறப்பிற்கான நீண்டகால பாரம்பரியம், மாணவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை, அனுபவமிக்க ஆசிரியர்கள், விரிவான பாடப்பொருள், கடுமையான தேர்வு முறை மற்றும் தனிப்பட்ட வழிகாட்டுதல் ஆகியவற்றின் மூலம் நாடு முழுவதும் தொடர்ந்து உயர்தர மருத்துவ நுழைவுத் தேர்வு சாதனையாளர்களை உருவாக்கி வரும் திறனை மீண்டும் வெளிப்படுத்துகிறது இந்த நிலையில் இன்று சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை பெருமை படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கு மாலை அணிவித்து,கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கியும் இதனை கொண்டாடினர் இந்த நிகழ்ச்சியில், ஆகாஸ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் துணை மண்டல இயக்குநர் டி. சிவா பிரசாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# மருத்துவ துறையில் கடந்த 35 ஆண்டு கால பயணத்தில் புதிய மைல்கல்லாக சுந்தராபுரம் அபிராமி மருத்துவமனையில் "அபிராமி நெக்ஸ்ட் கேர்" துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை சுந்தராபுரம் பகுதியில் கடந்த 1992 ஆம் ஆண்டு ஒரு மருத்துவமனையாக தனது மருத்துவ சேவையைத் தொடங்கிய ஸ்ரீ அபிராமி மருத்துவமனை, கடந்த 35 ஆண்டுகளாக தரமான மற்றும் அர்ப்பணிப்புமிக்க மருத்துவ சேவையை வழங்கி, இன்று பல்வேறு அதிநவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய முன்னணி பல்துறை மருத்துவமனையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்நிலையில் அபிராமி மருத்துவமனையின் முக்கிய மைல்கல்லாக,மருத்துவமனையின் மேம்படுத்தப்பட்ட மருத்துவ உள்கட்டமைப்பாக "அபிராமி நெக்ஸ்ட் கேர்" எனும் புதிய மையம் துவங்கப்பட்டது..



இதற்கான துவக்க விழா,ஸ்ரீ அபிராமி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.. இதில் சிறப்பு விருந்தினர்களாக ,தமிழக அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார் ஆகியோர் கலந்து கொண்டு, புதிய மருத்துவ சேவைகளை உள்ளடக்கிய அபிராமி நெக்ஸ்ட் கேர்" மருத்துவ உள்கட்டமைப்பை திறந்து வைத்தனர்..

இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ அபிராமி மருத்துவமனை இயக்குனர்கள் மருத்துவர்கள் குந்தவைதேவி பெரியசாமி, செந்தில் குமார், பாலமுருகன்,உமாதேவி,சுசாரிதா ஆகியோர் கலந்து கொண்டனர்..

முன்னதாக செய்தியாளர்களிடம் மருத்துவமனை தலைவர் டாக்டர் பெரியசாமி மற்றும் இயக்குனர்கள் டாக்டர் செந்தில் குமார்,டாக்டர் பாலமுருகன் ஆகியோர் பேசுகையில்,கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் அபிராமி மருத்துவமனை நோயாளிகளின் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதோடு அவர்களை அக்கறையோடு கவனிப்பதில் கூடு ம்தல் கவனம் செலுத்தி நன்மதிப்பை பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.. தற்போது நவீன தொழில் நுட்ப மருத்துவ வசதிகளை இணைத்து,மருத்துவமனையில் புதிதாக ரோபோட்டிக் அறுவை சிகிச்சை மையம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை சேவைகள், ஏ.ஐ. தொழில்நுட்ப வசதியுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, மேம்படுத்தப்பட்ட இதய சிகிச்சை மையம், குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, பேச்சு மற்றும் தொழில்வழி சிகிச்சை மையம், ஐவிஎப் மையம் உள்ளிட்ட பல்வேறு நவீன மருத்துவ வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவர்கள், கல்வியாளர், அரசு அதிகாரிகள், தொழில்துறை பிரமுகர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய விருந்தினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஓமலூரில் மக்கள் நீதிமன்றம்: காசோலை வழக்குகளுக்கு தீர்வு



ஓமலூர் வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில், ஓமலூர் நீதிமன்ற வளாகத்தில் மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஓமலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் விரைவு நீதிமன்ற நீதிபதி சதா உசேன், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி வெற்றிமணி, ஓமலூர் தாலுக்கா வழக்கறிஞர் சங்கத் தலைவர்பி.எஸ்.சுந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த மக்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காசோலை தொடர்பான வழக்குகளில்,பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் இரு தரப்பினரின் சமரசத்தின் மூலம் தீர்வு காணப்பட்டன. இதன் மூலம் வழக்குதாரர்கள் விரைவான நீதியைப் பெற்று பயனடைந்தனர்.

# வேலையில்லா பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.4 ஆயிரமாக உயர வாய்ப்பு

புதுக்கோட்டை: தமிழகத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.4 ஆயிரமாக உயர வாய்ப்புள்ளதாகவும், இதுதொடர்பாக வரும் பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகும் எனவும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஜெ. முகமது பர்வேஸ் தெரிவித்தார்.



புதுக்கோட்டையில் அரசுத் துறைகள் சார்பில் 721 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. ஆட்சியர் எம் .அருணா தலைமை வகித்தார். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெ . முகமது பர்வேஸ் தெரிவித்ததாவது: தமிழகத்தில் தங்கியுள்ள பிற மாநில தொழிலாளர்களின் விவரங்கள் அரசிடம் உள்ளன. மாவட்டம் தோறும் அதிகாரிகளும் கணக்கெடுப்பு நடத்தி வருகின்றனர். சிவகாசிபட்டாசுஆலை தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவது உள்ளிட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் உரிய காலத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். இதன் அடிப்படையில், வேலையில்லா பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.4ஆயிரமாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப் படும். இதற்கான அறிவிப்பு வரும் பட்ஜெட்டில் வெளியாக வாய்ப்பு உள்ளது.

மேலும், தேயிலைத் தோட்ட நல வாரிய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட பணப்பலன்கள் வழங்குவது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கோவையில் மாணவர்களின் பன்முகத்திறன்களை வெளிப்படுத்தும் பிரைன் ஓ பிரைன் அபாகஸ் போட்டி

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்றனர்

கோவையில் சிறு குழந்தை மாணவர்களின் மூளைத்திறன்களை அதிகபடுத்தும் வகையில் பிரைன் ஓ பிரைன்:பெஸ்ட் எனும் அபாகஸ் போட்டி நடைபெற்றது..கோவைகுரும்பபாளையம் குறிஞ்சி ஹாலில் நடைபெற்ற இந்த போட்டியில், கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் பங்கேற்று, அபாகஸ் கணக்கீடு, மனக்கணக்கு, நினைவாற்றல் மற்றும் வேகமான சிந்தனைத் திறன்களைவெளிப்படுத்தினர். போட்டியின் முடிவில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



நிகழ்ச்சியில் பிரைனோபிரைன் சர்வதேச மேலாண்மை இயக்குநர் ஆனந்த் சுப்ரமணியம் மற்றும் தொழில்நுட்ப இயக்குநர், முதன்மை பயிற்சியாளர் அருள் சுப்ரமணியம் ஆகியோர் போட்டிகளை துவக்கி வைத்து, அபாகஸ் செயல்முறைகள் குறித்து விளக்கம் அளித்தனர்..

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசுகையில், குறிப்பாக இன்றைய டிஜிட்டல் காலத்தில் குழந்தைகளின் ஒருமுக கவனத்தையும் சிந்தனைத்திறனையும் மேம்படுத்துவது மிகவும் அவசியமாகியுள்ளது. குழந்தைகளின் நினைவாற்றல், கவனத்திறன், தன்னம்பிக்கை, முடிவெடுக்கும் திறன் மற்றும் படைப்பாற்றலை வளர்க்கும் முழுமையான மூளைப் பயிற்சியை பிரைன் ஓ பிரைன் செயல்படுத்தி வருவதாக தெரிவித்தனர். அதற்கு அபாகஸ் பயிற்சி சிறந்த கருவியாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.. நிகழ்ச்சியில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பிரைனோபிரைன் பயிற்சி மைய நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு ஈங்கூர் தொழிற்பேட்டை புனரமைப்புப் பணிகள்: சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு நேரில் ஆய்வு



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்திற்குட்பட்ட ஈங்கூர் தொழிற்பேட்டைகளில் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், சாலை, மழைநீர் வடிகால் அமைப்புகள், குடிநீர்,மின்சாரம்,திடக்கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், பசுமைப்பகுதி பராமரிப்பு உள்ளிட்ட வசதிகளின் செயல்பாடுகள் குறித்து அவர் ஆய்வு செய்தார். மேலும், இயங்கி வரும் தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகள், புதிய முதலீட்டு வாய்ப்புகள், வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்ததோடு, தொழில்முனைவோரின்கோரிக்கைகளையும் குறைகளையும் கேட்டறிந்தார்.

ஆதிதிராவிடர்சமூகத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்காக, சிறப்பு மத்திய நிதி உதவியின் மூலம் ரூ.20.388 கோடி செலவில் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு 30.09.1997 அன்று பணிகள் நிறைவு செய்யப்பட்டன. கடந்த 29 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த தொழிற்பேட்டை பயன்பாட்டில் இல்லாததால், தொழிற்கூடங்கள் மற்றும் சாலை, குடிநீர், தெருவிளக்குகள், கழிவுநீர் வடிகால் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளைபுனரமைப்புசெய்ய வேண்டிய நிலைஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனுமதியின் அடிப்படையில், தண்ணீர் வசதி, வடிகால் அமைப்புகள், தெருவிளக்குகள், நுழைவுவாயில், காவலர் தங்கும் அறை, அணுகுசாலை, சுற்றுச்சுவர் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் ரூ.18.03 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை அமைச்சர் ஆய்வு செய்தார். அத்துடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்கள் உடனடியாகதொழில்தொடங்குவதற்கு தேவையான வசதிகளுடன், ரூ.11.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரண்டு நவீன ஆயத்த தொழிற்கூடங்களின் (Plug & Play) பணிகளையும் பார்வையிட்டார்.

இந்த மேம்பாட்டுப் பணிகளை திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் தரமான முறையில் நிறைவு செய்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் விரைவாக தொழில் தொடங்கும் வகையில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திட வேண்டும் என்றும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முன்னோடி தொழில் வளாகமாக இதனை உருவாக்கிட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு சமூக நீதித்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி, சமூகநீதித்துறைஅலுவலர் சுடலை மணி, வட்டாட்சியர் செல்வகுமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர். மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பெருந்துறை மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் உடன் இருந்தார்.



தூத்துக்குடி மாவட்ட சமத்துவ மக்கள் கழகம் நாடார் பேரவை சார்பில், பெருந்தலைவர் காமராஜர் 124வது பிறந்தநாள்விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மணிநகர் 4வது தெருவில் உள்ள அரசு மருத்துவமனை எதிரில் உள்ள ராமலட்சுமி திருமண மண்டபத்தில் 1000 ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் பி.எம். அற்புதராஜ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் எம்.எல்.ஏ.ஏ.நாராயணன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். மேலும், நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி செயலாளர் பாலமுருகன் மற்றும் மாநகர மாணவர் அணி செயலாளர் விஜய் கார்த்திக் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.

# ஈரோடு மாவட்டம் தாளவாடியில் லாரியை மறித்து கரும்பை சுவைத்த காட்டு யானை



ஈரோடு மாவட்டம் தாளவாடியில் இருந்து கரும்பு பாரம் ஏற்றிக்கொண்டு சத்தியமங்கலம் நோக்கி ஒரு லாரி மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் நேற்று மதியம் வந்துகொண்டு இருந்தது. ஆசனூர் வந்தபோது, சாலை யோரம் நின்றுகொண்டு இருந்த ஒரு காட்டு யானை கரும்பு பாரம் ஏற்றிய லாரியை மறித்தது.

இதனால் டிரைவர் லாரியை நிறுத்திக்கொண்டார். இதையடுத்து யானை லாரியின் மீது போடப்பட்டு இருந்த தார்பாயைவிலக்கிவிட்டு கரும்புகளை எடுத்து சுவைத்தது. இதைப்பார்த்த மற்றவாகன ஓட்டிகளும் வாகனங்களை நிறுத்திக்கொண்டனர். சுமார் 15 நிமிடம் யானை கரும்பை சுவைத்து விட்டு, அதன்பின்னர் காட்டுக்குள் சென்றுவிட்டது.

வனப்பகுதியில் உள்ள காட்டு யானைகள் அடிக்கடிதேசியநெடுஞ்சாலையோரம் வந்து நின்றுவிடுகின்றன. அவ்வாறு நிற்கும் யானைகள் தாள வாடியில் இருந்து ஆசனூர் வழியாக கரும்பு, காய்கறி ஏற்றிக்கொண்டு சத்தியமங்கலம் மற்றும் கோவைக்கு செல்லும் வாகனங்களை மறித்து அவற்றைதின்று நாசப்படுத்துகின்றன. எனவே தேசிய நெடுஞ்சாலையோரம் நிற்கும் யானைகளை வனத்துறையினர் தொடர்ந்து ரோந்து சென்று விரட்ட வேண்டும் என்று வாகன ஓட்டிகள், விவசாயிகள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# கோவை கருமத்தம்பட்டியில், போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை, பரதநாட்டிய நிகழ்ச்சி மூலமாக ஏற்படுத்தி சுமார் 2 கிலோமீட்டர் தூரம் நடனமாடி விழிப்புணர்வூட்டிய மாணவர்கள்




கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியைச் சேர்ந்த ரங்காஸ் அகாடமி பரதநாட்டிய பள்ளியைச்சேர்ந்தநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிராக "டான்ஸ்சத்தான்" என்னும் பரதநாட்டியம் ஆடியப்படியே மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்றனர். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ரங்காஸ் பரதநாட்டிய பயிற்சி பள்ளியின் நிறுவனர், நடன ஆசிரியர் சுபா வசந்த் கூறியதாவது..

தற்பொழுது நிலவி வரும் போதை கலாச்சாரத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினரும்தங்களது விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். தமிழ்நாடு அரசும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது.இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளில் எங்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், பரதநாட்டியத்தின் மூலம் போதை பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்து, எங்களது நடனப்பள்ளியைசேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த மூன்று வார குறுகிய கால இடைவேளையில், தொடர்ந்து பயிற்சி எடுத்து, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி உள்ளனர். 2 கிலோமீட்டர் வரை பரதநாட்டியம் ஆடிக்கொண்டே மாரத்தான் என்பது மிகவும் கடினமான ஒன்று. இருப்பினும் இதை முழு மனதோடு ஏற்று நாங்கள் இந்த நிகழ்ச்சி நடத்தியுள்ளோம், 3 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் இதில் பங்கேற்றனர். இந்தியாவில் இதுவரை போதைப் பொருளுக்கு எதிராக யாரும் இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்தியதில்லை. முதல் முறையாக எங்களது நடன பள்ளி மூலமாக இந்தநிகழ்ச்சியைநடத்தி உள்ளோம். மேலும் இதுபோன்று போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை விரிவுபடுத்தி, தமிழக அரசும்,கோவைமாவட்ட நிர்வாகம் அனுமதியளித்தால் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களை அழைத்து கோவையில் மிகப்பெரிய அளவில் போதைப் பொருளுக்கு எதிரான கின்னஸ் சாதனை படைக்க முயற்சி செய்வோம் என்றனர்.மேலும் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை கண்காணிக்க வேண்டும், அவ்வாறு கண்காணிக்கதவறுவதே போதைப் பழக்கத்திற்கு வழிவகுத்து வருகிறது என்ற விழிப்புணர்வை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஏற்படுத்தி உள்ளதாக தெரிவித்தார் மேலும் இந்த நிகழ்ச்சி நடைபெற உறுதுணையாக இருந்த கருமத்தம்பட்டி காவல்துறை, கிங் உடற்பயிற்சி கூடம், ஸ்ரீ கவி பியூட்டி பார்லர், மாணவர்களின் பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# மேல்விஷாரத்தில் AMP தலைவர் மரியாதை நிமித்த சந்திப்பு

## இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் மாணவர்களின் உயர்கல்வி உதவித்தொகை குறித்து ஆலோசனை



ராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரத்தில் Association of Muslim Professionals (AMP) அமைப்பின் தலைவரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பி.எஸ். முஸ்தபா ஜீனானி மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், மாணவர்-மாணவிகளின் உயர்கல்விக்கான உதவித்தொகை திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

மேலும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் எதிர்காலத்தில் இணைந்து செயல்படுவதுகுறித்தும்கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் AMP மேல்விஷாரம் தலைவர் கபூர் அசிமுத்தீன், கமிட்டி நிர்வாகிகள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிர்வாகி அம்ஜத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# Delhi HC refuses Wangchuk's wife Angmo's immediate request to shift him out of govt hospital, seeks status report



*The Delhi high court on Sunday said activist Sonam Wangchuk need not be shifted out of a government hospital at this time, after his wife Gitanjali J Angmo filed a plea seeking permission to immediately shift him from Safdarjung Hospital to a private facility instead.*

*"Wangchuk is not in detention, but the wife, brother and brother-in-law have been given access," Justice Mini Pushkarna noted. In the order, the court said, "Every life is precious," and noted that family members of Wangchuk have been given a separate room and are able to spend time around him. "Considering this, no interim order is required to be passed at this stage," the judge said, seeking a status report on his health in three days and setting July 24 as the next date of hearing.*

*Wangchuk was on Saturday taken forcibly to Safdarjung Hospital by the Delhi Police on the 21st day of his hunger strike. He has been on an indefinite hunger strike since June 28 in support of the Cockroach Janta Party (CJP)-led protest demanding education minister Dharmendra Pradhan's resignation over irregularities in the NEET medical entrance examination and other issues.*

*In her plea, Angmo said she "lost faith" in the government hospital and wanted to move the activist to a private facility of her choice before his health deteriorates. Senior advocate Kapil Sibal, appearing for her, argued in court, "The hospital is not been giving access to his own doctors, lawyers; and they do not know what he is being prescribed." The court, however, said, "Considering the overall perspectives, this court is of the view that since the govt has taken the decision to shift Mr Wangchuk to hospital on account of medical condition, this court does not find the same to be an arbitrary action."*

*Since the doctors at Safdarjung Hospital are closely monitoring his health and have given him oral supplements as per his consent, "it cannot be said that any force is being used against Wangchuk", the court noted.*

*The judge further said, "Considering the fact that he in his own violation did not check himself to any hospital, the government was within its right to take such action."*

*What govt argued*

*During the hearing, asked by the judge what "compelled" the police to take Wangchuk away from the site, additional solicitor general Chetan Sharma, appearing for the government, said Wangchuk's health was deteriorating after 18 days of fasting "in this weather".*

*"This leads to syndrome known as ketosis. It may or may not reflect on parameters but it can lead to something known as a shock. If potassium goes down, it can lead to – there is an expression – hypokalemia," he argued.*

*He also said a high court bench's earlier order to monitor his health had guided the action taken.*

# ஜம்மு காஷ்மீரில் ஊடுருவல் முயற்சி முறியடிப்பு



ஸ்ரீநகர்: ஜம்மு காஷ்மீரின் ரஜவுரி செக்டார் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்யும் முயற்சியாக சுமார் 2 மணி நேரம் பாகிஸ்தான் படையினர் துப்பாக்கியால் சுட்டனர்.

இதற்கு இந்திய ராணுவம் தரப்பில் தகுந்த பதிலடி தரப்பட்டது. அப்போது தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டது. பாகிஸ்தானில் உள்நாட்டுப் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே, பாகிஸ்தான் ராணுவம் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக பாதுகாப்புத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.